**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**S.S.C. No - 42/2022**

**Prosecution PW - 1**

| | | | |
|---|---|---|---|
| Name | பாதிக்கப்பட்ட சிறுமி | Occupation | வீட்டுக்குடித்தனம் |
| Father's Name | xxx | Village | xxx |
| Age | 20 | Taluk | xxx |
| Date | 12.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

**<u>(Accused Ragupathi present.)</u>**

(இவ்வழக்கானது குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வழக்காக இருப்பதால் நீதிமன்றத்தின் கதவுகள், ஜன்னல்கள் மூடப்பட்டு, பாதிக்கப்பட்ட சிறுமி, அரசு வழக்கறிஞர், எதிரியின் வழக்கறிஞர், நீதிமன்ற எழுத்தர் மற்றும் தட்டச்சர் ஆகியோர் மட்டும் உள்ள நிலையில் (இன்கேமரா) வழக்கின் விசாரணை தொடரப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட சிறுமியின் பார்வையில் இல்லாமல், எதிரி கண்ணாடி அறையில் அமர்த்தப்பட்டுள்ளார்.)

<u>முதல் விசாரணை: -</u>

நான் xxx ( சாட்சிகுவிமுச 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஊரின் பெயரை கூறுகிறார்) வசித்து வருகிறேன். எனது பிறந்த தேதி 06.07.2005 ஆகும். எனது அப்பா ஆட்டோ ஓட்டிவருகிறார். அம்மா வீட்டு வேலைக்கு சென்று வருகிறார். நான் அவர்களுக்கு ஒரே மகள் ஆவேன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரி ரகுபதி எனது கணவர் ஆவார். நான் அவரை காதலித்தேன். அவர் என்னை திருமணம் செய்து கொள்வதற்காக தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்றேன், அங்கு போலிசார் என்னிடம் ஒரு வெற்று பேப்பரில் கையெழுத்து பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.1 ஆகும்.** அதன் பின்னர் என்னை போலிசார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். **நான் மருத்துவரிடம் எதுவும் கூறவில்லை. அதன் பின்பு என்னை தஞ்சாவூரில் உள்ள ஒரு நீதிமன்றத்திற்கு வாக்குமூலம் அளிப்பதற்காக அழைத்து சென்றார்கள். அங்கு போலிசார் சொல்லிக்குடுத்தன் அடிப்படையில் வாக்குமூலம் அளித்தேன். அவ்வாறு எதிரி பற்றி நான் சொல்லியுள்ள விவரங்கள் அ.த.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்க வில்லை.**

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினர். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலிசார் விசாரணையில், நானும் எதிரி ரகுபதியும் ஒருவரை ஒருவர் காதலித்தோம் என்றும், இருவரும் அடிக்கடி போனில் பேசிகொள்வோம் என்றும், அவர் என்னை வெளியில் அழைத்து செல்வார் என்றும், கடந்த 18.12.2022 ஆம் தேதி மதியம் 03.00 மணிக்கு எதிரி ரகுபதி எனக்கு போன் செய்து அவர் வீட்டுக்கு வரச்சொன்னர் என்றும், அதற்கு நான் வரமுடியாது என்று சொன்னேன் என்றும், அவர் என்னுடன் பேசவேண்டும் என்று வீட்டுக் வரச்சொன்னர் என்றும், நான் அங்கு சென்றபோது, வீட்டில் அவர் மட்டும் தான் இருந்தார் என்றும், நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது, என்னை கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்து, என்னை கட்டாயப்படுத்தி என் உடைகளை கழற்றி என்னுடன் உடலுறவு வைத்துக்கொண்டார் என்றும், அதேபோல் அடிக்கடி அவர் வீட்டுக் அழைத்து என்னுடன் பலமுறை உடலுறவு வைத்துக்கொண்டார் என்றும், அதன் பின்னர் ஜனவரி மாதம் முதல் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் வாந்தி எடுத்தேன் என்றும், அதனால் 15.01.2022 ஆம் தேதி என்னை எனது அம்மா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு மருத்துவர் என்னை பரிசோதனை செய்து எனக்கு இரத்தம் குறைவாக இருப்பதாக கூறி அனுப்பிவிட்டார்கள் என்றும், அதன் பின்னர் எனக்கு தொடர்ந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் 25.02.2022 ஆம் தேதி மீண்டும் என்னை எனது அம்மா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், அங்கு மருத்துவர் என்னை பரிசோதித்து நான் கர்ப்பமாக இருப்பதாக என் அம்மாவிடம் கூறினர் என்றும், என்னை என் அம்மா விசாரிக்கும்போது, எதிரி ரகுபதி என்னை காதலிப்பதாகவும், அவரது வீட்டிற்கு என்னை அடிக்கடி வரச்செய்து என்னை திருமணம் செய்துகொள்வதாக ஆசைவார்த்தை கூறி, என்னுடன் பலமுறை உடலுறவுக் கொண்டதாக கூறினேன் என்றும், அதனால் எதிரி ரகுபதி மீது தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 27.02.2022 ஆம் தேதி புகார் கொடுத்தேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தபோது நடந்த விவரங்களை கூறினேன் என்றும், அதன் பின்னர் போலிசார் என்னை மருத்துவ பரிசோதனைக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு என்னை பரிசோதித்த மருத்துவர் 2 மாத கர்ப்பமாக இருப்பதாக கூறினர்கள் என்றும், 07.03.2022 ஆம் தேதி என்னை உள்நோயாளியாக அனுமதித்து எனக்கு கருகலைப்பு செய்து, 09.03.2022 ஆம் தேதி மருத்துவமனையிலிருந்து என் பெற்றோர்களுடன் என் வீட்டுக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும், 11.03.2022 ஆம் தேதி போலிசார் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு வைத்து நீதிபதியிடம் நடந்த விவரங்களை கூறினேன் என்றும், மருத்துவரிடமும் நடந்த விவரங்களை கூறினேன் என்று கூறிவிட்டு, தற்போது எதிரி ரகுபதி எனது கணவர் என்பதாலும், அவருடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாலும் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எனக்கு 18 வயது பூர்த்தியானதும் எனது பெற்றோரும், எதிரி ரகுபதியின் பெற்றோரும் சேர்ந்து எங்களுக்கு 03.07.2024 அன்று தஞ்சாவூர் வரதராஜ பெருமாள் கோவிலில் வைத்து திருமணம் செய்து கொடுத்தார்கள். எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. எனது கணவர் என்னையும், எனது குழந்தையையும் நன்றாக பார்த்து வருகிறார்.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜே. தமிழரசி,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)